**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 20.08.2025**
**OS. No. 117/2017**
**வழக்கு சாட்சி PW.2–வெங்கடசுப்ரமணி, த/பெ. பச்சமுத்து**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1, 3 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>1, 3 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

10) என் நிரூபண வாக்குமூலத்தில் 5ம் பிரதிவாதியின் தந்தை சின்னபொண்ணு என்பவர் பொன்னப்பன், ஆறுமுகம், ரத்தினம்மாள் செங்குட்டுவன் ஆகியோர் மீது இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதாக சொல்லப்படும் வழக்கு எண் தற்போது சொல்ல முடியுமா என்றால் நினைவில்லை. அந்த வழக்கின் மீது தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு எண் தெரியுமா என்றால் மேல்முறையீடு தாக்கல் செய்தார்கள் என்று தெரியும், ஆனால் எண் தெரியாது. மேற்கண்ட வழக்கில் இந்நீதிமன்றத்தில் தாவா 5வது அயிட்ட சொத்தில்சொல்லப்பட்டுள்ள ச.எண்.99/3ல் மேற்கண்ட 4நபர்களும், அவர்களது ஆட்களும் அத்துமீறி நுழைந்து பிரச்சனை செய்யக்கூடாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் மீது மேற்கண்ட 4 நபர்களும் தாக்கல் செய்த மே.மு.எண்.37/1988ஆனது 03.12.1987ல் தாவா 5வது அயிட்ட சொத்தில்சொல்லப்பட்டுள்ள ச.எண்.99/3ல் மேற்கண்ட நபர்கள் நடந்து கொள்ளலாம் என்றும், தண்ணீர் பைப் அடியில் அமைத்துள்ளதை வைத்து கொள்ளலாம் என்றும், அதை தவிர்த்து வேறு உரிமை இல்லை என்றும் தீர்ப்பானது என்றால் சரிதான். அதை தான் என் நிரூபண வாக்குமூலத்திலும் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

11) மேற்கண்ட 4 நபர்களில் பொன்னப்பன் மற்றும் ஆறுமுகம் ஆகியோர்களிடமிருந்து வாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட நபர்களுக்கு அந்த சொத்தில் என்ன உரிமை இருக்கிறதோ, அதை கிரையம் பெற்ற வாதிகளும் அதை மட்டும் தான் கேட்க முடியும் என்றால் சரிதான். வாதிகள் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரமானது ஏற்கனவே அவர்களது முன் உரிமையாளர்களுக்கு இந்நீதிமன்றத்தில் வழங்கப்பட்டுள்ளது என்றும், மீண்டும் அதே பரிகாரம் கோரி தாக்கல் செய்த இந்த

வழக்கானது முன் தீர்ப்பு தடை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், மீண்டும் மீண்டும் வழக்கு தாக்கல் செய்து பிரதிவாதிகளை வாதிகள் அலக்களிக்கிறார்கள் என்றால் சரியல்ல. அ.வ.எண்.122/1983 என்ற வழக்கு தாக்கல் செய்தபோது என்ன தடம் இருந்ததோ அது தற்போது வரை உள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்பில் வழங்கப்பட்ட பரிகாரத்திற்கு தாண்டி அதிகபடியான பரிகாரம் வாதிகள் கேட்க அருகதை இல்லை என்றால் சரியல்ல, மேற்கண்ட வழக்கில் பொதுவழித்தடத்தை காண்பிக்கவில்லை, அதை தான் இவ்வழக்கில் நாங்கள் கேட்கிறோம்.

12) மேற்கண்ட வழக்கில் ச.எண்.99/3 ல் கிழபுறம் ஓரமாக கால்வழித்தடமாகத்தான் சென்று வரலாம் என்று அதில் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான், ஆனால், பொதுவழித்தடமாகது மேற்கண்ட சர்வே எண்ணில் வடகிழக்கு மூலையிலிருந்து, தென்மேற்கு வழியாக செல்கிறது, அதை தான் இவ்வழக்கில் நாங்கள் கேட்கிறோம். மேற்கண்ட சர்வே எண்ணில் நடு காடடில் தடம் செல்வதாக வரைபடம் தாக்கல் செய்து வழக்கு நடத்தி வருகிறோம் என்றால் தடம் ஏற்கனவே இருந்தது. அவ்வாறு தடம் இருந்ததற்கான அரசு வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் செய்துள்ளோம். அவ்வாறு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு ச.எண்.99/3 ல் நடுகாட்டில் தடவழி செல்வதாக அரசு வரைபடத்தில் உள்ளதாக என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வாதிகள் தாக்கல் செய்த மாதிரி வரைபத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

13) தாவா 5 வது அயிட்ட சொத்தில் உள்ளவாறு தான் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 14 தான் நான் மேலே சொன்ன வரைபடமா என்றால் சரிதான். மேற்கண்ட வரைபடத்தில் நேராக ஒரு தடமும், அதிலிருந்து கிளை தடம் ஒன்று பிரிந்து செல்வதாகவும் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்லும் அரசு வரைபடத்தில் மேற்கண்டவாறு தான் தடம் காண்பிக்கப்பட்டுள்ளதா

என்றால் இல்லை, அந்த மாதிரி வரைபடத்தில் இடது பக்கமுள்ள ஒரு தடம் மட்டும் தான் அரசு வரைபடத்தில் இருந்தது, சீதாராமன் நிலத்திற்கு செல்லும் தடம் என்று குறிப்பிடப்பட்டுள்ள வலது பக்கம் உள்ள தடம் அரசு வரைபடத்தில் இல்லை. வா.சா.ஆ.14 வரைபடத்தில் இரு தடத்திற்கும் தனித்தனியாக 500 அடி என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் அளவுகள் 500 அடி என்பது சரியானதா அல்லது 100 அடி என்பது சரியானதா என்றால் எனக்கு தெரியவில்லை.

14) தாவா 5 வது அயிட்ட சொத்தாக 500 அடி நீளம், 30 அடி அகலமுள்ள வண்டிப்பாதை என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் வா.சா.ஆ.14 வரைபடத்தில் இரண்டு 500 அடி என 1000 அடி என காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், இரண்டில் எது சரியானது என்றால் எனக்கு தெரியவில்லை. மாதிரி வரைபடமும், தாவா 5 வது அயிட்ட சொத்தும் ஒத்துப்போகவில்லை என்றால், ஒன்றுக்கொன்று முரணாக உள்ளது என்றால் சரியல்ல. மாதிரி வரைபடம் நிலையில் இல்லாத ஒரு தடத்தை காண்பித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா 5 வது அயிட்ட சொத்தில் மாதிரி வரைபடத்தல் குறிப்பிட்டுள்ளவாறு நிலையில் இல்லை என்றால் சரியல்ல, கிழக்குபுறம் மட்டும் தான் நாங்கள் சென்று வருகிறோம் என்றும், மாறாக வேறு ஒரு வழித்தடத்தையும் காண்பித்து வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

15) 5 ம் பிரதிவாதி ஆனந்தன் என்பவர் சக்திவேல் என்பவர் மீது இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.161/2016 என்ற வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் பிள்ளையார் கோவிலில் திருவிழா நடப்பதை தடுததற்காக தாக்கல் செய்யப்பட்டது. நான் சொல்வது தவறு என்றும் ச.எண்.99/3 ல் கண்ட சொத்தை மேற்கண்ட சக்திவேல் என்பவர் பஞ்சாயத்து வார்டு மெம்பராக இருப்பதை பயன்படுத்தி அபகரிக்க முயற்சி செய்ததால் அந்த சொத்து 5 ம் பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த வழக்கை குறித்து எனக்கு தெரியாது என்றும், ஆனால் தெரியாமலேயே மேற்கண்ட சக்திவேல் உண்மை

சங்கதிகளை சொல்லி வழக்கை நடத்தி வருவதாக பொய்யாக நிரூபண வாக்குமூலத்தில சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

16) வழக்கு 5 வது அயிட்ட சொத்தான ச.எண்.99/3 ல் 5 ம் பிரதிவாதியின் தந்தை சின்னபொண்ணுவிற்கு டி–கார்டு பட்டா மூலம் பாத்தியப்பட்டது என்ற உண்மையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அவருக்கு பட்டா உள்ளது எனக்கு தெரியாது. ஒரு சொத்தின் உரிமையாளராக ஒருவரை ஏற்றுக்கொண்டபிறகு தான் அந்த சொத்தில் தூய்ப்புரிமை பரிகாரம் கேட்க இயலும் என்றும், அதனால் அடிப்படையிலேயே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. ஏற்கனவே நீதிமன்றம் வழித்தட பாத்தியம் உள்ளதாக தீர்ப்பு வழங்கப்பட்டதை ஒப்புக்கொண்டுள்ளதால், மீண்டும் அதே பரிகாரத்திற்கு இந்த வழக்கை தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. மேற்கண்ட மே.மு.எண்.37/1988 ஐ எதிர்த்து வாதிகளின் முன உரிமையாளர்கள் கால்வழித்தடம் மட்டும் வழங்கப்பட்டுள்ளது என்றும், அது போதாது வண்டித்தடப்பாத்தியமும் தேவை என்று மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யாமல், மேற்கண்ட தீர்ப்பு தற்போது வரை ஊர்ஜீதத்தில் உள்ளது என்றால் சரிதான். ச.எண்.99/3 ல் இல்லாத ஒரு தடத்தை அந்த சொத்தின் நடுகாட்டில் உள்ளது போல் காண்பித்து தாக்கல் செய்துள்ள இந்த வழக்கிற்கு நானும் ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.